**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 25.11.2022

ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் இளமறிவியல் மாணவர் சேர்க்கைக்கான கலந்தாய்வு (2022-2023)**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் 2022 ஆம் கல்வியாண்டிற்கான இளமறிவியல் மாணவர் சேர்க்கைக்கான கலந்தாய்வு இணையதள வாயிலாக 26.11.2022 அன்று துவங்க உள்ளது. ஆறாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்புவரை அரசு பள்ளியில் பயின்ற மாணவர்களுக்கான 7.5 % இடஒதுக்கீட்டின் கீழ் 413 இடங்களை நிர்ப்புவதற்கான முதற்கட்ட கலந்தாய்வு 26.11.2022 முதல் 28.11.2022 வரை இணையதளவாயிலாக நடைபெறஉள்ளது. இக்கலந்தாய்வில் மாணவர்கள், தாங்கள் முதன் முதலில் பூர்த்திசெய்து அளித்திருந்த விண்ணப்பத்திலுள்ள விருப்ப கல்லூரி மற்றும் பாடப்பிரிவினை மாற்றி அமைத்துக் கொள்ளலாம். ஒதுக்கப்பட்ட இடங்களின் விவரங்கள் 30.11.2022 அன்று வெளியிடப்படும். சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் நகர்வுமுறையே 02.12.2022 மற்றும் 03.12.2022 அன்று நடைபெறும். இந்த இட ஒதுக்கீட்டிற்கு தேவைபட்டால் இரண்டாம் கட்டகலந்தாய்வு 06.12.2022 அன்று நடத்தப்படும். பொதுப்பிரிவினருக்கான முதற்கட்ட இணையவழி கலந்தாய்வு 05.12.2022 அன்று தொடங்கி நடைபெறஉள்ளது. பொதுப்பிரிவினருக்கான இரண்டாம் கட்டகலந்தாய்வு 19.12.2022 அன்று நடைபெறும். பொதுப்பிரிவினருக்கான கலந்தாய்வின் மூலம் 2495 அரசு கல்லூரிகளில் (உறுப்புகல்லூரி) உள்ள 12 பட்டப்படிப்புகளுக்கான இடங்கள் நிரப்பப்படும். இணைப்புக் கல்லூரிகளில் உள்ள இளமறிவியல்(மேதமை) வேளாண்மை மற்றும் இளமறிவியல்(மேதமை) தோட்டக்கலை பட்டப்படிப்புகளுக்கான 2771 இடங்கள் நிரப்பப்படும். தகவல்களுக்கு 0422-661134, 0422-6611346 என்ற எண்களை வார நாட்களில் தொடர்பு கொள்ளலாம். விரிவான அட்டவணை www.tnau.ucanapply.com என்ற இணையத்தில் வழங்கப்பட்டுள்ளது.

**மக்கள் தொடர்பு அலுவலர்**